aglasem.com

FOR KARNATAKA 2ND PUC EXAM PREPARATION

Karnataka 2nd PUC 2027 Sample Paper · Tamil

EXAM	YEAR	TYPE	SUBJECT
Karnataka 2nd PUC	2027	Sample Paper	Tamil

GOVERNMENT OF KARNATAKA
KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD
6TH CROSS, MALLESHWARAM, BENGALURU - 560 003
2026 -27 II PUC MODEL QUESTION PAPER - 1

SUBJECT: TAMIL (04) **MAXIMUM MARKS: 80**

TIME : 03 HOURS **NUMBER OF QUESTIONS: 55**

மாணவர்களின் கவனத்திற்கு

1. **கையெழுத்து தெளிவாகவும், அழகாகவும் இருக்க வேண்டும்.**
2. **வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களைச் சரியாக எழுத வேண்டும்.**
3. **கட்டுகரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்.**

பகுதி - ஒன்று

I. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக **10X1=10**

1. எண்ணத்திற்கு எட்டாதவன்

(அ) சேரன் (ஆ) சோழன்

(இ) இறைவன் (ஈ) பக்தன்

2. சிறுபஞ்சமூலம் நூலை இயற்றியவர்

அ. கபிலர் ஆ. காரியாசான்

இ. பரணர் ஈ. திருவள்ளுவர்

3. புறப்புண் நாணி வடக்கிருந்தோன் யார்?

அ .சோழன் ஆ .சேரன்

இ . பாண்டியன் ஈ . குலோத்துங்கன்

4. சுதந்திர தேவியை என்றும் தொழுதவர்

அ. கண்ணதாசன் ஆ. பாரதிதாசன்

இ. வண்ணதாசன் ஈ. பாரதியார்

5. மணிமேகலை என்ற காப்பியம் "துளக்கிமில் ஞாயிறாக" யாரை உருவகப்படுத்துகிறது"

அ. புத்தர் ஆ. பெருமாள்

இ. சிவன் ஈ. காளி

aglasem.com For more Question Papers, Sample Papers, Notes & Syllabus visit aglasem.com Page 1 of 5

6. வியாபாரிகள் தங்கள் தொழிலுக்குத் துணையாக சேர்த்துக் கொண்டனர்

அ. ஆலன் ஆ. ஏபல்

இ. லாரன்சோ ஈ. டாம்னிக்

7. மாலைக் காலத்துக்குரிய இராகம்

அ. இந்தோளம் ஆ. பூபாளம்

இ. சாரங்கம் ஈ. கலியாணி

8. 'சுயநலம்' சிறுகதையில் வேலப்பன் கடைவீதிக்குச் சென்று வாங்கி வருவன யாவை?

அ. தேக்கு மரத் துண்டு, பிரம்பு கத்தை

ஆ. சந்தன மரத் துண்டு, தேக்கு மரத் துண்டு

இ. பிரம்புக் கத்தை

ஈ. ஒன்னம் மரம்

9. அசட்டு மூட்டையை கட்டிக் கொண்டு யவனத்திலிருந்து வந்தவன்

அ. சாத்தன் ஆ. மூபாங்கோ

இ. பைலார்க்கஸ் ஈ. அலெக்ஸாண்டர்

10. எல்லா பாவங்களையும் கழுவுவதற்காக காசிக்கு சென்ற பண்ணக்காரன் அங்கிருந்து திருடிக் கொண்டு வந்தது

அ. தோடு ஆ. வளையல்

இ. கொலுசு ஈ. சங்கிலி

II. கோடிட்ட இடங்களை நிரப்புக **5X1=5**

11. இராவண காவியம் நூலை இயற்றியவர் (புலவர் குழந்தை/வாணிதாசன்)

12. நற்றிணை என்பது .....(நல்+திணை /நன்று + திணை) என பிரியும்.

13. பெரியார் காந்திஜியை _____ சந்தித்தார். (டெல்லியில் / பெங்களூரில்)

14. ..... என்பவர் ஆங்கில மொழி அறிஞர். (பென் ஜான்சன் / ஜான்சன்)

15. யோஷிகி சிறுகதையில், 'எனக்கு நாளைக்கு விடுமுறை நாள்தான் என்று கூறியது .....

III. **பொருத்துக:** **5X1=5**

16.	வைத்தால் ஆகும்	-	வசை
17.	வணக்கம் செய்ததனால் ஆகும்	-	செழுங்குலம்
18.	செய்த அருளினால் ஆகும்	-	அறம்
19.	அருளினால் ஆகும்	-	இசைப்பாடல்கள்
20.	பரிபாடல்கள்	-	போகம்

பகுதி - இரண்டு

பிரிவு - 1

அ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக: **2X2=4**

21. நெய்தல் திணையை விளக்குக.
22. வறுமையினால் ஒப்புரவாளர் தன் குணம் குன்றார் என்பதை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார்?
23. விளக்கைத் தூண்டிய மங்கையின் விரலுக்குச் சொன்ன உவமை யாது?

பிரிவு - 2

ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக **2X2=4**

24. பெரியார் அறிமுகப்படுத்திய சுயமரியாதைத் திருமணத்தைப் பற்றி எழுதுக
25. அமெரிக்கர்களுக்குக் காது கேட்கும் திறன் குறைந்து வருவதற்கான காரணம் என்ன?
26. 'நெய்யைப்' பற்றி ராமானுஜத்திற்கும், சமையல்காரனுக்கும் இடையே நடந்த உரையாடலை எழுதுக.

பிரிவு - 3

இ. ஏதேனும் ஒரு வினாவிற்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக **1X2=2**

27. சுவாமிகளைச் சுற்றிப் பந்தலில் இருந்தவற்றை எழுதுக.
28. செம்மான் தன் கடைசிக் காலத்தை எங்கே யிருந்து, என்ன செய்து கொண்டு எண்ணிக் கொண்டிருந்தான்?

பகுதி – மூன்று

எவையேனும் மூன்று வினாக்களுக்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக **3X3=9**

29. ‘‘வந்தனை உனக்குத் தந்தேன் மலரடி எனக்குத் தந்தாய்''
30. ‘‘சேரிப்புள்ளிப் பள்ளர் ஆடிப் பாடித் துள்ளிக் கொள்வோமே''
31. ''அந்த அறிக்கை பார்ப்பனரல்லாதோரின் கோரிக்கையை நிராகரித்தது''
32. 'முருகாயியை வெட்கம் பிடுங்கித் தின்றது'
33. ‘அஞ்சு நிமிஷத்துல போயிட்டு வந்துறலாம் வண்டிதான?''
34. ‘அவனா நம்முடன் பணம் போடப்போகிறான்''

பகுதி - நான்கு

பிரிவு - 1

அ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக **2X4=8**

35. 'அறக்கதிர் விரிக்கும்' என்ற பகுதியில் புத்த ஞாயிற்றின் செயல்களாகக் கண்ணகி கூறுவன யாவை?
36. ‘தமிழ் மொழியின் சிறப்புகளை புலவர் குழந்தை எவ்வாறு புகழ்கிறார்?

aglasem.com For more Question Papers, Sample Papers, Notes & Syllabus visit aglasem.com Page 3 of 5

37. குடும்ப விளக்கின் தலைவி, கடைக்குச் செல்லும் கணவனை எவ்வாறு அனுப்பி வைத்தாள்?

38. இளமையில் கல் என்ற கவிதையின் மூலம் கவிஞர் வைரமுத்து கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக

பிரிவு - 2

ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக **2X4=8**

39. அம்பேத்கரின் அறிவுத்தாகம் பற்றிய செய்திகளை விவரி

40. வள்ளுவனை எம்மதத்தாரும் தம் மதத்தவன் என்று போற்றுவதற்கான காரணங்களாக ஜீவா கூறுவன யாவை?

41. மனிதர்கள் உருவாக்கிய நிறுவனங்களும் நம்பிக்கைகளும் வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கங்களாகக் கட்டுரையாசிரியர் கூறுவனவற்றை விவரித்து எழுதவும்

42. உயர்ந்த நாடகத்தில் திரையரங்கில் நடந்த உரையாடலை விவரி.

பிரிவு - 3

இ. ஏதேனும் ஒரு வினாவிற்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக **1X4=4**

43. எந்தெந்த விசயங்களை ஜானகிராமனிடம் பேசக் கூடாதென்று யோஷிகி,ஹோட்டல் பணிப்பெண்ணிடம் கூறியிருந்தார்?

44. மஞ்சனாத்தி மலையில் வரும் சிறுமியின் மனம் லேசாகியது என்று கூறுவதன் பின்னணியை விவரித்தெழுதுக

பகுதி - ஐந்து

பிரிவு - 1

அ. கீழ்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக **1X4=4**

45. 'மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம் பெருந்தகை யான்கண் படின்'

பிரிவு - 2

ஆ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக **4X2=8**

46**. சேர்த்து எழுதுக**

(அ) உள்ளுவது + எல்லாம் = (ஆ) தளிர் + இலை =

47**. பிரித்தெழுதுக**

(அ) சேவடி= (ஆ) காக்குமதை=

48. **எதிர்ச்சொல் எழுதுக**

(அ) வேண்டா X (ஆ) வாய்மை X

aglasem.com For more Question Papers, Sample Papers, Notes & Syllabus visit aglasem.com Page 4 of 5

49**. இலக்கணக் குறிப்பு எழுதுக**

(அ) கருணைக் கடல்- (ஆ) பெருமலை-

50**. கீழ்வரும் தொடர்களை நல்ல தமிழில் எழுதுக**

(அ) இந்த சிட்டியில் மால்ஸ் சூப்பரா இருக்குது.

(ஆ) டமில் க்ளாஸ் வெரி ன்டெஸ்டிங்கா இருந்தது.

51**. கீழ்வரும் சொற்களின் பொருளுணர்ந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

(அ) விண்ணுக்கும் மண்ணுக்கும்

(ஆ) அண்டம்

பகுதி - ஆறு

பிரிவு - 1

அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றிற்கு கட்டுரை வடிவில் விடை எழுதுக 1X5=5

52. "தொலைப்பேசியினால் ஏற்படும் நன்மை தீமை" கொண்டு ஒரு கட்டுரை எழுதுக

அல்லது

53. இன்றைய காலத்தில் மக்கள் பயன்பாடுகளில் அதித வளர்ச்சிப் பெற்ற அறிவியல் சாதனைக் குறித்து கட்டுரை எழுதுக

பிரிவு - 2

ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு விடை எழுதுக 1X4=4

54. உங்கள் வீட்டின் குடும்ப அமைப்பைக் குறித்து தோழிக்கு கடிதம் ஒன்று எழுதுக

அல்லது

55. கீழே கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளை தமிழில் மொழி பெயர்த்து எழுதுக:

1. Money makes many things.
2. Think everybody alike.
3. Youth and age will never agree.
4. Charity begins at home.

aglasem.com For more Question Papers, Sample Papers, Notes & Syllabus visit aglasem.com Page 5 of 5